Pபெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 159 நாள்: 20.05.2026

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், அண்ணா நகர் மண்டலம், வார்டு 100, டெய்லர்ஸ் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அதன் செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., அவர்கள், அண்ணா நகர் மண்டலம், வார்டு 100, டெய்லர்ஸ் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் இரவு சாப்பாடு நேரத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அதன் செயல்பாடுகள் குறித்து இன்று (20.05.2026) ஆய்வு செய்தார்.

டெய்லர்ஸ் சாலையில் அம்மா உணவகத்தினைப் பார்வையிட்ட மாநகராட்சி ஆணையர் அவர்கள்,அங்கு இரவு உணவு சாப்பிட்ட மக்களிடம் கலந்துரையாடி சாப்பாடு தரம் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். மூன்று ரூபாய்க்கு ஒரு செட் சப்பாத்தி வழங்கப்படுவதையும், அதற்கு பருப்பு கடைசல் வைத்திருப்பதையும் பார்வையிட்டும், சாப்பிட்டுப் பார்த்தும் தரத்தினை ஆய்வு செய்தார்.

மேலும், சமையலறையில் இருப்பில் உள்ள பொருட்கள் விவரங்களையும், பாத்திரங்கள் கழுவும் இடம், கை கழுவும் இடம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்டும், உணவு சமைத்திட தேவையான எரிவாயு சிலிண்டர் இருப்பில் உள்ளதையும், குடிப்பதற்கு தூய நீர் வழங்கப்படுவதையும் ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்தார்.

இந்த அம்மா உணவகத்தில் சராசரியாக 150 பேர் வரை உணவு உட்கொள்வதாக பணியாளர்கள் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ஒவ்வொரு நாளும் மக்களுக்கு தரமான உணவு வழங்கப்பட. வேண்டும் என பணியாளர்களிடம் அறிவுறுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் 383 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகிறது.இந்த அம்மா உணவகங்களை சிறப்பாகப் பராமரித்து, மக்களுக்கு தரமான உணவு வழங்குவதை உறுதி செய்திடவும் மண்டல அளவில் அலுவலர்கள் நியமனம் செய்து கண்காணித்திட உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாநகராட்சி அலுவலர்கள் அம்மா உணவகப் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**